**AETM-404**

**IV Semester B.B.A./ B.H.M./ B.C.A./B.S.W. Degree Examination, June/July - 2025**

**(NEP Scheme Freshers + Repeaters)**

**Paper IV - TAMIL**

NEW HORIZON COLLEGE LIBRARY KASTURINAGAR BANGALORE-43

**Time : 2 ½ Hours** **Maximum Marks : 60**

## SECTION - A

**I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்துடுத்து எழுதுக.**

**(4 x 1 = 4)**

1. பா – இத்தனை வகைப்படும்
   அ. 4
   ஆ. 5
   இ. 6
   ஈ. 7

2. பாண்டியன் பரிசு நூலின் ஆசிரியர்
   அ. பாரதியார்
   ஆ. பாரதிதாசன்
   இ. இளங்கோவடிகள்
   ஈ. முடியரசன்

3. கள்ளிக்காட்டு இதிகாசம் என்னும் புதினத்திற்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்
   அ. மீரா
   ஆ. நா. முத்துக்குமார்
   இ. கண்ணதாசன்
   ஈ. வைரமுத்து

4. சிற்பி பாலசுப்ரமணியம் எழுதிய நூல்
   அ. தொலைந்து போனவர்கள்
   ஆ. பாரதி வம்சம்
   இ. புதிர் எதிர்காலம்
   ஈ. குயில்பாட்டு

[P.T.O.

**II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (4 x 4 = 16)**

1. அவளுக்கும் புதுசு பிடிக்கும், புதுப்புடவையின்வாசனை பிடிக்கும், புதுப்புடவையின் வெளிச்சம் பிடிக்கும்
2. இமயம் முதல் குமரி வரை எங்களுடைய நாடு இடையிலுள்ள தேசமெல்லாம் எங்களுக்கு வாசம்
3. தன்முடிமேல் பேழையினைத் தூக்கி வந்த தண்டூன்று கிழவரை நீ மணப்ப தூண்டோ?
4. உலகிலுள்ள எந்த மொழியிலும் இதற்கு இணையான நூல் இல்லை, அது அறிஞர் கூறும் உண்மை
5. தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்தன என்று வரலாறு கூறுகிறது.
6. வெள்ளையர் எதிர்க்கும் முயற்சிக்கு சின்னமலையே தலைமை ஏற்க வேண்டும் என்றும் அனைவரும் உதவி செய்வதாகவும் ஒப்புக் கொண்டார்கள்

## SECTION - B

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4 x 6 = 24)**

1. குறத்தியர் பாட்டு பாடலின் வழி மலைவாழ் மக்கள் கருத்துக்களை கூறுக.
2. இருபது வரிகளுக்குள் நான்கு தலைமுறைகளிடையே நிகழ்ந்த மாற்றங்களை யானைகதையின் வாயிலாக விளக்குக.
3. அன்னம் என் பேழையைத் தேடித் தருவோனையே நான் மணப்பேன் என்று கூறியதை கதையின் வாயிலாக விளக்குக.
4. வள்ளுவர் வகுத்த இல்லறம் – தொகுத்து எழுதுக.
5. சான்றோர்களின் நெறியில் தமிழ் பண்பாடு ஒரு விளக்கம் கூறுக.
6. வேதாத்திரி மகரிஷி கூறிய நட்பு நலம் குறித்து எழுதுக.

## SECTION - C

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4 x 4 = 16)**

1. உவமை அணி சான்றுடன் விளக்குக.
2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
3. எதுகைத் தொடை, மோனைத்தொடை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. அசையின் வகைகளை சான்றுடன் கூறுக.
5. வேற்றுமை அணி எடுத்துக்காட்டுடன் எழுதுக.
6. இல்பொருள் உவமை அணியை விளக்குக.